# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 20.02.2023**

**அசல் வழக்கு எண்.39/2014**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் இந்த வழக்கை தாக்கல்செய்தபோதே வழக்கு சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்து அம்மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டார் என்றால் சரிதான். 04.07.2014 ல் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்ட நிலையில் 18.12.2016 அன்றுதான் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். தபசில் 2 வது அயிட்ட சொத்தில் பிரதிவாதிகளின் வீட்டில் இருந்து சென்ற கழிவுநீர் குழாயை அப்புறப்படுத்திவிட்டு சிமெண்டால் பூசப்பட்டுள்ள விவரம் தெரிந்துவிடும் என்பதால் நான் வழக்கை தாக்கல் செய்து 2 1/2 ஆண்டுகள் கழித்து நீதிமன்ற ஆணையரை வழக்கு சொத்தை பார்வையிட அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல.

2. எங்கள் வீட்டிலிருந்து கழிவுநீர்களை தபசில் 2 வது அயிட்ட சொத்து வழியாகத்தான் குழாய் புதைத்து எடுத்துச்செல்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டின் கழிவுநீரும் ஆதியிலிருந்து தபசில் 2 வது அயிட்ட சொத்து வழியாக வாறுக்கால் அமைத்து எடுத்துச்செல்லப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு 5 ஆண்டுகளுக்கு முன்பு பிரதிவாதி தன்னுடைய வீட்டின் கழிவுநீரை தபசில் 2 வது அயிட்ட சொத்தில் குழாய் அமைத்து அதன் வழியாக கழிவுநீரை எடுத்துச்சென்றார் என்றால் சரிதான். பிரதிவாதியால் 2 வது அயிட்ட

சொத்தில் அமைக்கப்பட்டிருந்த குழாயை அவர் வெளியில் சென்றிருந்த காலத்தில் நான் அப்புறப்படுத்திவிட்டு சிமெண்டால் பூசிவிட்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தன்னுடைய வீட்டின் மேற்கு புறத்தில் குழாய் அமைத்து கழிவுநீர் எடுத்துச்செல்வதாக நான் வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.5 புகைப்படத்தில் நீலநிறத்தில் வண்ணமிடப்பட்டுள்ள வீடு பிரதிவாதியின் வீடு என்றால் சரிதான். வாசாஆ.5 ல் பிரதிவாதியின் வீட்டின் சுவரை ஒட்டி புதிதாக சிமெண்டால் பூசப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகைப்படத்தில் புதிதாக சிமெண்டால் பூசப்பட்டுள்ள பகுதியில்தான் பிரதிவாதி வீட்டின் கழிவுநீர் ஆதியிலிருந்து சென்றது என்றால் சரியல்ல. என் தந்தை பெயர் குருசாமி நாடார் என்றாலும் எனது தாத்தா பெயர் மணிமுத்துநாடார் என்றாலும் சரிதான். தபசில் 2 வது அயிட்ட சொத்து எங்களுக்கும் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட பொதுப்பாதை என்றால் சரியல்ல. பொதுப்பாதை வழியாகத்தான் பிரதிவாதி தன்னுடைய வீட்டை வண்ணமிட்டு பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. நத்தமாக இருப்பதால் பிரதிவாதி அவ்வப்போது தன்னுடைய வீட்டிற்கு வண்ணமிட்டு பராமரித்துக்கொள்வார். பிரதிவாதி 2 வது அயிட்ட சொத்து வழியாக புதிதாக குழாய் அமைக்க முயற்சி செய்ததாக நான் எனது பிராதில் குறிப்பிட்டுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. 08.08.1990 ல் என்னுடைய தந்தையும் பிரதிவாதியின் தந்தையும் சுவர் சம்மந்தமாக உடன்படிக்கை ஏற்படுத்தி கொண்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. என்னுடைய வீடும்

பிரதிவாதியின் வீடும் பழைய காலத்து வீடு என்றால் சரியல்ல. பிரதிவாதி இடத்தை வாங்கியபிறகு புதிதாக வீடு கட்டினார். 1990 ம் ஆண்டில் பிரதிவாதி வீடு கட்டினார்.

4. பிரதிவாதியின் வீடு ஆதியில் சாகுல்ஹமீது ராவுதத் பாத்தியப்பட்ட வீடு என்றால் சரிதான். சாகுல்ஹமீது ராவுதத் அந்த வீட்டை 1973 ம் ஆண்டு முகமது இஸ்மாயில் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் வாங்கியிருப்பார். சாகுல்ஹமீது ராவுத்தர் கிரையம் வாங்கியபோதே அந்த இடத்தில் வீடு உள்ளதாக குறிப்பிட்டுதான் கிரையம் வாங்கியுள்ளார் என்றாலும் நான் அந்த இடத்தில் வீடு இல்லை என பொய் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. அந்த இடத்தில் ஏற்கனவே ஓட்டுசாய்பு வீடு இருந்தது. பிரதிவாதியின் தந்தை அந்த இடத்தை வாங்கிய பிறகு அந்த ஓட்டு வீட்டை இடித்து விட்டு காரைவீடு கட்டினார். பிரதிவாதியின் வீட்டின் கீழ்புறச்சுவரில் குடிநீர் செல்லும் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதி கடந்த 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு அந்த குடிநீர் குழாயை அமைத்தார் நான் அப்போது ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. பிரதிவாதியின் வீட்டின் கீழ்புறச்சுவரில் 2 ம் அயிட்ட சொத்து வழியாக மின்இணைப்பு பைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதியின் வீட்டில் ஏற்கனவே மேற்குபக்கமாக மின்இணைப்பு பைப்புகள் பொறுத்தப்பட்டிருந்தது அதன்பிறகு பிரதிவாதி புதிதாக வீடு கட்டியபோது கீழ்புறமாக மின்இணைப்பு பைப்புகளை பொறுத்திவிட்டார். ஆதியிலிருந்தே பிரதிவாதியின் வீட்டிற்கு 2 வது அயிட்ட சொத்துவழியாகத்தான் மின்இணைப்பு பைப்புகள் சென்றது என்றாலும் நான்

வழக்கிற்காக வீட்டின் மேற்குபுறம் மின்இணைப்பு பைப்புகள் சென்றதாக பொய் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

5. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் தபசில் சொத்தை காட்டக்கூடிய புகைப்படங்கள் என்றால் சரிதான். **<u>அது பிவாசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.5 புகைப்படங்கள் தபசில் 2 ம் அயிட்ட சொத்தின் முகப்பிலிருந்து எடுக்கப்படாமல் இடையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ.1ல் தபசில் 2 வது அயிட்ட சொத்தில் முகப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ.1ல் கண்ட 2 வது புகைப்படத்தில் என்னுடைய வீட்டின் மேற்குபுறச்சுவரில் மாடியிலிருந்து குழாய் அமைக்கப்பட்டு தரையில் புதைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ.1ல் கண்ட 3 வது புகைப்படம் என் வீட்டிற்கும் பிரதிவாதியின் வீட்டிற்கும் மேல்புறம் உள்ள பாதை என்றால் சரிதான்.

6. பிரதிவாதியின் வீட்டின் முன்புறப்பகுதியைதான் புதிதாக கட்டப்பட்டது என்றாலும் பின்புறப்பகுதி பழைய கட்டிடம் என்றாலும் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட பொது பாதையை எனக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்து என பொய் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிராதில் 9 வது பத்தியில் பிரதிவாதி தன்னுடைய வீட்டின் மேல்பக்கம் உள்ள சந்தில் உள்ள வாறுகால் வழியாக கழிவுநீர் எடுத்துச்செல்வதாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். பிவாசாஆ.1 புகைப்படத்தில் பிரதிவாதியின் வீட்டின் மேற்குபுறம் எந்த வாறுக்காலும் இல்லை என்றால் வாறுக்கால் இருந்தது பிரதிவாதி மூடிவிட்டார்.

அவ்வாறு எப்போது வாறுக்காலை மூடினார்கள் என்றால் பிரதிவாதி குழாய் அமைக்கும்போது வாறுக்காலை மூடிவிட்டார். பிரதிவாதியின் மேற்குபுறம் இருந்த வாறுக்காலை மூடிவிட்டதாக நான் என்னுடைய பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டின் மேற்குபுறத்தில் எந்த காலத்திலும் வாறுக்கால் இருந்தது இல்லை என்றாலும் அதனை பிரதிவாதி எப்போதும் மூடியதில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

7. தபசில் 2 வது அயிட்டசொத்து பொது பாதை என்றால் அதில் பூமிக்கடையில் பிரதிவாதி குழாய் புதைத்து கழிவுநீர் எடுத்துச்செல்வதால் எனக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்றால் சரியல்ல. ஏற்கனவே பிரதிவாதியால் அமைக்கப்பட்டிருந்த 2 வது அயிட்ட சொத்தில் அமைக்கப்பட்டிருந்த குழாயை நான் அப்புறப்படுத்தியதால் அந்த குழாயை மீண்டும் அமைத்துத்தர நான் கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. தபசில் 2 வது அயிட்ட சொத்துக்கும் பிரதிவாதி வீட்டிக்கு தெற்குபுறம் பள்ளிவாசல் தெற்குதெரு உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன பள்ளிவாசல் தெற்குதெருவானது 2 வது அயிட்டநடைப்பாதைக்கு சற்று பள்ளத்தில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல சமமாக உள்ளது. பிரதிவாதியின் வீட்டின் மாடியின் கழிவறை மற்றும் குளியறை இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி குடும்பத்தினர் சோப்பு நீர் அனுப்பிவந்ததால் பலமுறை எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனை சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா

என்றால் இல்லை. பிரதிவாதி தன்னுடைய வீட்டை சுத்தம் செய்த தண்ணீர் குழாய் வழியாக 2 வது அயிட்ட சொத்தில் எடுத்துச்செல்வார் அதனால் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

8. தபசில் 2 வது அயிட்ட சொத்து மற்றும் பிரதிவாதியின் வீட்டை ஒட்டி கிழமேல் வாறுக்கால் உள்ளது என்றால் சரிதான். 2 வது அயிட்ட சொத்தின் மீது எந்த காலத்திலும் பிரதிவாதியின் வீட்டின் கழிவுநீர் சென்றதில்லை என்றாலும் வீட்டின் வடக்குபுறம் உள்ள பெரிய வாறுக்காலில் கழிவுநீர் விழுந்து வெளியேறுகிறது என்றால் சரியல்ல. தபசில் 2 வது அயிட்ட சொத்து எனக்கும் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட பொதுப்பாதை என்றாலும் அதனால் நான் கோறும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. பிரதிவாதி இவ்வழக்கில் 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேன். பிரதிவாதி தன்னுடைய எதிர்வழக்குரையில் சாகுல்ஹமீது கிரையம் பெற்ற பத்திரத்தில் என்னுடைய தாத்தா மணிமுத்து நாடாருக்கும் முகமது இஸ்மாயிலுக்கும் பாத்திய்ப்பட்ட பொது முடக்கு என காண்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

9. சாகுல்ஹமீது ராவுத்தரிடமிருந்துதான் பிரதிவாதியின் தந்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதியின் தந்தை தான் கிரையம் பெற்ற சொத்தை பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளார் என்றால் நான் கேள்விப்பட்டேன். பிரதிவாதியின் தந்தை எழுதிவைத்த செட்டில்மெண்ட்

ஆவணத்தில் பொது பாதைக்கு மேற்கு என எழுதுவதற்கு பதிலாக பாதைக்கு மேற்கு என தவறுதலாக எழுதிவிட்டார் என்றால் சரியல்ல. எனது தாத்தா மணிமுத்து நாடாரும் சாகுல் ஹமீதும் 2 வது அயிட்ட சொத்தை பொது பாதையாகத்தான் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 2 வது அயிட்ட சொத்தில் பிரதிவாதியால் அமைக்கப்பட்டிருந்த குழாயை நான் அப்புறப்படுத்தியால் பிரதிவாதி என்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. என்னுடைய பிராதில் பிரதிவாதி 2 வது அயிட்ட சொத்தில் புதிதாக குழாய் அமைக்க முயற்சி செய்ததததை நான் தடுத்ததால் பிரதிவாதி என்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

10. பிரதிவாதி புதிதாக குழாய் அமைத்தது சம்மந்தமாக புகார் கொடுக்கவில்லை என்றாலும் நான் ஏற்கனவே இருந்த குழாயை அப்புறப்படுத்தியால் பிரதிவாதி என்மீது புகார் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. 2 வது அயிட்ட சொத்தில் ஏற்கனவே இருந்த குழாயை அப்புறப்படுத்திவிட்டு அந்த இடத்தில் சிமெண்டால் பூசப்பட்டுள்ள விவரம் நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.5 புகைப்படங்களிலும் பிவாசாஆ.1 புகைப்படங்களிலும் துலங்கும் என்றால் சரியல்ல. பிரதிவாதி கொடுத்த புகாரில் காவல் துறையினர் என்னை விசாரணை செய்து நான் ஏற்கனவே அப்புறப்படுத்திய குழாயை மீண்டும் அமைத்து தரும்படி அறிவுறுத்தினார்கள் என்றால் சரியல்ல. 2 வது அயிட்ட சொத்து எனக்கும் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட பொதுப்பாதை என்றாலும் அதன்வழியாக பிரதிவாதி பூமிக்கடியில் கழிவுநீர் குழாய் அமைத்து கழிவுநீர் எடுத்துச்செல்ல உரிமையுள்ளது

என்றாலும் சரியல்ல. நான் அப்புறப்படுத்திய கழிவுநீர் குழாயை மீண்டும் அமைத்துத்தர கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்கோரிக்கை அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**